# யோகி, பாலசிங்கம், ஹமீத், படைத்தளபதிகள் திருமலே நகரை சுற்றிப் பார்வையிட்டனர்

விடுதலைப்புலிகளும் அமைச்சர் ஹமீதும் நேற்று திருமலையில் சந்தித்து பேச்சுக்களை நடாத்தினர். விடுதலைப் புலிகள் சார்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், புலிகளின் திருமலைத் தளபதி பதுமன், அரசியல் பொறுப்பாளர் ரூபன், பிரதேசப் பொறுப்பாளர்கள் வித்தி, தயா ஆகியோர் கலந்து கொண்டனர். அமைச்சர் ஹமீத்தோடு முப்படைகளின் இராணுவ அதிகாரிகளும் இப்பேச்சில் கலந்து கொண்டனர், அவர்கள் திருமலை நகரைச் சுற்றிப்பார்த்து புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றிப் பேச்சுக்கள் நடாத்தினர். அமைதிப்படையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து திருமலையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தினர்.


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 42 ஞாயிறு 18-03-1990 (பங்குனி 05) ஷஃபான் 20


## தமிழ்ச்சேவை பணிப்பாளர் பேட்டி

# வடபகுதி கலைநிகழ்ச்சிகள் விரைவில் வானொலியில்

விரைவில் வானொலியில் புதிய நிகழ்ச்சிகள் அறிமுகம். பழைய நிகழ்ச்சிகள் மெருகூட்டப்படும். திறமையுள்ள கலைஞர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் வடபகுதியில்நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் விரைவில் வானொலியில் ஒலிக்கப் புதியதிட்டம் அமுல் நடத்தப்படும்.'' இவ்வாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் —8-ம் பக்கம்பார்க்க



# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி



தமிழகம் பயணமாகுமுன் திரு ப. நெடுமாறன் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே பிரபாகரனை சந்தித்து விடைபெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம். திரு. நெடுமாறன், பிரபாகரனைச் சந்தித்து விடைபெற்ற செய்தியை கடந்த 16 ஆம் திகதி 'முரசொலி' மட்டுமே பிரசுரித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. முதலாவது படத்தில் தலைவர் பிரபாகரன், மாத்தயா ஆகியோருடன் நெடுமாறன் இரண்டாவது படத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைமைச் செயலக நிர்வாகப் பொறுப்பாளர் திரு. நடேசன். முன்னணியின் கலாசாரப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, தலைமைக்குழு உறுப்பினர் காசி ஆனந்தன் ஆகியோருடன் தலைவர் பிரபாகரன், மாத்தயா காட்சியளிக்கின்றனர் திரு. நடேசன் இந்தியப் படையினரால் காவலில் வைக்கப்பட்டிருந்து கடந்த மாத இறுதியில் விடுதலை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய படையின் இறுதிப் பிரிவுகள் இம்மாதம் 24ந் திகதியே வாபஸ் -கல்கட்

[கொழும்பு]

இலங்கையில் உள்ள இந்தியப்படையினர் அனைவரும் படைவிலகலுக்கான இறுதித்திகதிக்கு ஒரு வார காலத்திற்கு முன்னதாகவே வெளியேறவுள்ளனர்.

இந்தியப்படைகளின் கடைசி அணி திருமலை துறைமுகத்தில் இருந்தே இந்தியா புறப்படவுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை 24 ஆம் திகதி இவ்வணி இந்தியா கிளம்பவுள்ளது. முன்னர் இம்மாதம் 31 ஆம் திகதியே இந்தியப் படை வெளியேறும் என தெரிவிக்கப்பட்டது.

இந்தியப்படைகள் வெளியேறுவதற்கு முன்னதாக இலங்கை அதிகாரிகளிடம் விடைபெற்றுக் கொள்ளுமுகமாக —8ஆம் பக்கம் பார்க்க

# அம்பாறையில் புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தின் கும்ண கடற்கரைக் காட்டுப் பகுதியில் இருந்த இரண்டு தமிழ் தேசிய இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில்நான்குதமிழ் தேசிய இராணுவத்தினர் கைது செய்யப்பட்டதோடு இருபத்தாறு அடிநீளமான படகொன்றும் 59 குதிரைச் சக்தியுடைய இரண்டுஎஞ்சின்களும் 50 கலிபர், லோஞ்சர், ஏ கே 47 ஆயுதங்களும், வானொலித் தொடர்பு சாதனங்களும், உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த இருமுகாம்களில் இருந்துஇருநூறுபேர்வரை மொனராகலை காட்டுப் பகுதிக்குள் — 8ஆம் பக்கம் பார்க்க

# மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னைபூபதி நினைவுக் கொண்டாட்டங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் இரண்டாம் வருடநினைவு தினம் நாளை முதல் வடகிழக்கு மாகாணம் எங்கும் கொண்டாடப்படவுள்ளது.

88-3-19 இல்மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலயத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த இவர் 88—4—19அன்று அதே ஆலயத்தில் மரணமானார் அதே ஆலயத்தில்நாளை அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கும் அன்னை பூபதி நினைவு தினக் குழு வடகிழக்கில் ஒரு மாதம் வரை நினைவு தின நிகழ்ச்சிகளை நடத்தும்.

இந்தியா நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்,புலிகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற இருகோரிக்கைகளை வைத்தே இவர் உண்ணாவிரதம் இருந்துஉயிர் நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஸ)

# தமிழ்இளைஞர்களைபோலிஸாராக நியமிக்குமாறுபுலிகள்கோரிக்கை

வடக்கு கிழக்கில் எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் இளைஞர்களை பொலிஸாராக நியமிக்கும்படி விடுதலைப் புலிகள் அரசைக்கேட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களின்செயற்பாடுகளில்எக்காரணம்கொண்டும் புலிகள் தலையிடமாட்டார்கள் என அம்பாறை அரசியல் பொறுப்பாளர்கரிகாலன் தெரிவித்துள்ளார்.

## சான்றிதழ்இன்றி பதவிஉயர்வில்லை

# கொழும்புத்துறைக் கலாசாலை ஆசிரியமாணவர் அவலநிலை

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் கடைசியாகப் பயிற்சிபெற்ற பல ஆசிரியர்கள் பதவியுயர்வு பெறமுடியாதுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பதவியுயர்வுக்கான நேர்முகப்பரீட்சையின்போது காண்பிப்பதற்கு அவர்களிடம் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்கள் இல்லாததே காரணமாகும்,

இந்த ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஏற்கனவே மூடப்பட்டுள்ளது அதனால் அவர்கள் தாம் பயிற்சியைப் பூரணப்படுத்தி பரீட்சைஎழுதி சித்தியெய்தியதற்கான சான்றிதழ்களை எங்கே பெறுவது எனத் —8 ஆம் பக்கம் பார்க்க

## அன்ரன் யாழ் வருகை

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் அவரது மனைவியார் சகிதம் நேற்று வடபகுதி வந்துள்ளதாக புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இன்று பாலசிங்கம் யாழ்நகர் புலிகளின் பிரமுகர்களைசந்திப்பார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுமாறன் விடுத்த அறிக்கை

# புலிகளும் மக்களும் நடத்திய போராட்டம் உலக வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது

கடந்த இருபத்தைந்து நாட்களாகத் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து, சகலதரப்பு மக்களையும் சந்தித்துப் பேசி, நான் கண்டு, கேட்டு அறிந்த விபரங்கள் அதிர்ச்சியும், வேதனையும், துயரமும் நிறைந்தவையாகும் இவ்வாறு திரு. பா. நெடுமாறன் தமது இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னையில் வெளியிட்ட அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படை என்ற பெயரில் இங்கு வந்த இந்தியப் படை, அழிப்புப் படையாக மாறித்தமிழீழத்தில் ஏராளமான நாசத்தையும், சேதத்தையும் விளைவித்து விட்டது. ஏராளமான குடும்பங்கள் சீர்குலைக்கப்பட்டுவிட்டன. வீடுகளும், தோட்டங்களும் அழிக்கப்பட்டு விட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து விட்டனர்.

அட்டூழியங்களிலிருந்து மக்களைக் காக்க விடுதலைப்புலிகள் நடத்திய வீரம் செறிந்த போராட்டம் என்னை மெய்சிலிர்க்கவைத்தது இந்திய வல்லரசின் படைகளை எதிர்த்துவிடுதலைப் புலிகளும், மக்களும் இணைந்து நடத்திய உரிமைப் போராட்டம் உலக வரலாற்றில் தனியானதொரு இடத்தினைப் பெற்று விட்டது விடுதலைப் புலிகளுக்குத் துணையாக மக்கள் புரிந்த தியாகத்திற்குத் தலை வணங்குகின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் போராட்டத்தின் விளைவாகத் தமிழீள மக்களின் கண்ணிகரற்ற தனிப் பெருந் தேசியத் தலைவராகப் பிரபாகரன் திகழ்கின்றார். தமிழீழ மக்களின் பாதுகாவலனாகவிடுதலைப் புலிகள் இயக்கம் திகழ்கின்றது மக்களும்மாறாதமனவுறுதி கொண்டவர்களாக இருக்கின்றார்கள். எதிர்காலத்தில் வெற்றி உறுதி என்பது, கல்லின் மேல் எழுத்தாக விளங்குகின்றது.

தமிழீழத்தில் நான் அறிந்த செய்திகளை இந்தியமக்களுக்குக் குறிப்பாகத் தமிழக மக்களுக்குத் தெரிவிப்பேன். அவர்களின் ஆதரவையுந் திரட்டுவேன்.

தலைவர் பிரபாகரன் தலைமையிற் தமிழீழ மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு உலகத் தமிழினம் துணைஎன்றும் கிடைக்கும், எனஅவ்வறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது (4)

# வசதிகுறைந்த மாணவருக்கு நிதி உதவி வழங்கப்படும்

யாழ். பல்கலைக் கழகத்தில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு உப வேந்தர் நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் செயற்படுத்தப் பட உள்ளது

இத் திட்டத்தின் கீழ் பகாபொல உதவித் தொகை பெருத இருபத்தைந்து மாணவர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கப்படும் என யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் அ.துரைராஜா தெரிவித்துள்ளார் (6)

## ரஞ்சித்துக்கு மாணவர் ஒன்றியம் அஞ்சலி

கடந்த புதன் கிழமை அரியாலை பூம்புகாரில் கடலில் மூழ்கி அகாலமரணமடைந்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை இவ்வாண்டு அனுமதி மாணவன் ரஞ்சித்திற்கு பல்கலைக்கழகக் கலைப் பீட மாணவர் ஒன்றியம் தனது அஞ்சலியைச் செலுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

## பல்கலை மாணவன் கடலில் மூழ்கி மரணம்

அரியாலை பூம்புகார் கடலிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நண்பர்களுடன் கடந்த புதன் கிழமை பிற்பகல் கடலில் குளிக்கச் சென்ற சமயம் காணமற்போன ஈச்சமோட்டையைச் சேர்ந்த வில்பிரட் றஞ்சித் (20) என்பவருடைய சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிப் பழைய மாணவரான இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுத் தற்பொழுது ஆங்கில பயிற்சி பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அரியாலை மத்தி, இல. 28 சின்னலிங்கண்டு லேனில் வீடும், கிணறும் அடங்கிய 2 1/8 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளல்: நி. பஞ்சரத்தினம், இல 164/10 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
03053

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை போன்றவற்றில் வேலைசெய்பவர்க்கான ஆங்கில வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், கிழமைநாட்களில் இரவு நேரத்திலும் நடத்தப்படும். தனிப்பட்டோர்களுக்கான (INDIVIDUAL TUITION) பயிற்சிகளும் அளிக்கப்படும் விபரங்களிற்கு: எஸ். ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204. மானிப்பாய் ரோட், ஒட்டுமடம் யாழ்ப்பாணம். 03055

A/L Physics

ஆசிரியர்

R. சத்தியசீலன்

B. M. C. முன்லேன்
யாழ்ப்பாணம்
A/L 90 Day Classes
(MON FRI)
8. 30 a. m Sound
9. 30 a. m Electricity
ஆரம்பம் 19. 3. 90
திங்கள் காலை 8.30 மணி
03156

வர்த்தகவிளம்பர ஓவியங்கள், உருவப்படங்கள், புளொக்ஸ் ஸ்ரிக்கர் என்பன செய்துகொள்ள

'லங்கா'
கொமர்ஷல் ஆட்டிஸ்ற்
108/1, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

## கணக்கு இலிகிதர் (தட்டெழுத்துடன்)

தகைமைகள்–

I) கூ. வே. 14வது சம்பளத்திட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

II) க பொ.த. (சா.த) கணிதம், தமிழ் உட்பட 5 திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி

III) க.பொ.த (சா த) 6 பாடங்களில் சித்தியுடன் தட்டெழுத்தில் ஒரு நிமிடத்தில் 20 சொற்கள் தட்டெழுத்து செய்யக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்
225—395
――――――
10×7—12.50×8 க்கு அமைவான புதிய சம்பளம்

விண்ணப்பங்கள் யாவும் 02-04-1990க்கு முன் தலைவர், வட்டு தொகுதி தெ. ப. பொ உ. கூ. சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
வ.தொ தெ ப பொ உ வி கூ.சங்கம்
சங்கானை

03151



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு; 27 – 06 – 1967



உதிர்வு: 21 – 03 – 1987

### செல்வி முருகேசு சந்திரமதி

### திதி: 18. 03. 90

தண்ணொளி வீசும் தண்மதி போல்
அன்பொளி வீசிய சந்திர மதியே!-எம்
குலக் கொடியே குல விளக்கே!
மூன்று யுகமென மூவாண்டு சென்றதம்மா!
நன்று புகழ் பெற்று நலமுடன் வாழ்வீர்என
ஏட்டினில் எழுதிட எட்டாத துயரில்
எமமை ஏங்க வைத்தாயம்மா!
இனி உன் மதிமுகம் காணும் யுகம் ஏதம்மா?
அன்பும் அறிவும் நிறைந்த பா மதியே
பண்பும் தென்பும் வளர்ந்த சுடர் ஒளியே!
சங்கம் வளர்த்து சமூகம் படைக்க
சந்திர மதியே காவியம் படைத் தாயோ!
பாரதி கண்ட புதுமைப் பெண் ணென—வாழ்வின்
பாதியிலே புது யுகம் சென்றனையோ? அன்பே—உன்
ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்—உமது
இழப்பின் சோகத்தால் தவிக்கும்.

187, ஆறுமுகம் ரோட்
வட்டக்கச்சி
03116

அன்பு, அம்மா, அப்பா,
தம்பிகள், தங்கை,
உறவினர்கள்,



EXTERNAL PHARMACIST EXAMINATION
CEYLON MEDICAL COLLEGE COUNCIL
COLOMBO

இலங்கை மருத்துவக் கல்லூரி சபை, கொழும்பு நடாத்தும்
வெளிவாரி பாமசிஸ்ற் பரீட்சை

மேற்படி பரீட்சைக்குரிய 8 வது பயிற்சி நெறி வகுப்புக்கள்

## 24-3-90

## ஆரம்பமாகின்றன

தகைமைகள்:-க. பொ. த (சாதாரணம்)
ஆங்கிலத்தில் சித்தி, விஞ்ஞானப் பாடம் ஒன்றில் திறமைச் சித்தி

சிறந்த செயல் முறை பயிற்சி

- இலவச ஆங்கில வகுப்புக்கள்
- 25 வருட அனுபவம் உடைய தகைமை பெற்றவிரிவுரையாளர் குழு
- பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு

டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும்

உங்கள் பதிவுகளுக்கு

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE

14, ST.PETERS LANE
Hospital Road,
Jaffna

03142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னர் கழிவு பஸ்கள் தற்போது கழிவு நஞ்சு

கொழும்புத் துறைமுகக் களஞ்சியசாலையில் நூற்றுத்தொண்ணூறு தொன்களுக்கும் மேற்பட்ட எடையுள்ள பதின்மூன்று கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இக் கொள்கலன்களில் விஷத் தன்மை கொண்ட ஆபத்தான கழிவுப் பொருட்கள் உள்ளடக்கி இருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

எனினும் இவை எவ்வாறான பொருட்கள் என இன்னமும் சரியாக அடையாளம் காணப்படவில்லை இதைத் தெரிந்து கொள்வதற்காக இக் கழிவுப் பொருட்களின் சாம்பிள்கள் அரச இரசாயனப் பகுப்பாளர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக் கொள்கலன்களில் என்ன பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டது? எங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டது? என்ற விபரங்கள் யாவும் மர்மமாக உள்ளன.

பென்சில் இரேசர் என்ற போர்வையில் இறக்குமதி செய்யப்பட்ட கழிவுப் பொருட்கள்தான் இவை என்றும், அவ்வாறல்ல மூன்றுந்தர நெற்செய்கைப் பசளையான டயாசுனன் தான் இது என்றும் பல்வேறுபட்ட ஐயப்பாடுகள் நிலவுகின்றன.

# இதயநாதம்

ஞாயிற்றுக்கிழமை 18—03—1990

## நல்வாக்கு

பயம் என்றால் என்ன என்று கேட்கும் உள்ளம் தேவை. ஆம் பயந்தறியா இரும்பாலான உள்ளமும் உறுதியும் தேவை.

-விவேகானந்தர்

ஸரான்லி வீதி, யாழ்ப்பாணம்

முதலில் தென்கிழக்காசியாவில் ஏதோ ஒரு நாட்டில் இருந்துதான் இவை இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் தற்போது இது பாகிஸ்தானிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது எனக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி இதனைப் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்தவர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டார் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது

மொத்தத்தில் இத்தகவல்களை அடிப்படையாக வைத்து நோக்கும் போது பாரிய தொழிற்சாலை ஒன்றின் கழிவுப் பொருளாகிய இதனைத் திட்டமிட்ட ரீதியில் இங்கு கொண்டுவந்து இறக்கி உள்ளனர்.

இதனை இறக்குமதி செய்தவர் தனது கூலியினையும் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி விட்டார்.

இந்நிலையில் இந்த விஷக் கழிவுப் பொருளை என்ன செய்வது என்ற பிரச்சினை தற்போது எழுந்துள்ளது.

தகுந்த பாதுகாப்புடன் அதி வெப்ப சூழ்நிலையின்கீழ் இக் கழிவுப் பொருட்கள் எரிக்கப்பட்டால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என மத்திய சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மாறாக இவ்வாறான நச்சுப் பொருட்களை அழிப்பது அசாத்தியமானாலும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது எனச் சூழல் பவுண்டேஷன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந் நச்சுக்கழிவுகளை மீண்டும் ஏற்றிச் செல்வதை விட உள்ளூரிலேயே அழிப்பது இலாபகரமானது என்ற ஒரே காரணத்திற்காக அவ்வாறு செய்வது நீண்ட காலப் போக்கில் அபாயகரமானது எனச் சுட்டிக் காட்டுவதோடு;

இனிமேலும் இவ்வாறு யாராவது விஷக் கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போகுமளவிற்கு அரசு அசிரத்தையாக இருக்கக்கூடாது எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

## இரவுத் தபால் புகையிரதத்தில் நமதுநிருபர் விசிட் (2)

# பாய்ந்தேற கால்கள் ஆயத்தம்

# சீற்பிடிக்க இங்கே சிறுயுத்தம்

... இரண்டு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ... "இதல நான் பாக் வைச்சிட்டுப் போனது உமக்குத் தெரியவில்லையோ ... நீர் என்ர பாக்க தூக்கி அங்கால வைச்சிட்டு குசாலா இருக்கிறீர் ... எழும்பும் கதையவிட்டிட்டு" ..."இந்த சீற் உமக்கு எண்டு எழுதிய வைச்சிருக்கு ... எழும்ப மாட்டான் என்ன செய்யப்போறீர்... சீற்றப் பிடிச்சா சீற்றில ஆள் இருக்கவேணும் ..." ... அத விடடிட்டு ...பாக் வைச்சனுன்... என்றீர்...

இப்ப எழும்பப் போறீரோ இல்லையா...!

எழும்பாட்டி என்ன செய்வீர்...

பாக் வைத்தவர் ... மற்றவருடைய சேட்டைப் பிடித்து விட்டார்... இவர்கள் இருவருமே நாகரிகமான உடையை அணிந்திருக்கிறார்கள் ... படித்தவர்கள் ... கூட்டம் கூடிவிட்டது ... பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் ... கூட்டத்திற்குள் புகுந்து ... பிரச்சினையை விசாரிக்கின்றனர் ... பாக் வைத்து விட்டு போனவருக்கு...வேறு இருக்கையைப் பெற்றுக் கொடுத்து விட்டு அவர்கள் செல்கிறார்கள் ...

பாக வைத்தவர்... "நான் கஷ்ரப்பட்டு சீட்பிடிக்க வடிவா இருக்கிறீரோ...

நான் ஆசனத்தில் இருப்பவரை பார்க்கின்றேன்...அவர் இவருடைய கதையை காது கொடுத்துக் கேட்காமல் மிகவும் அமைதியாக இருக்கின்றார்..

...பாக் வைத்தவர் விடவில்லை ... உனக்கு வெட்கமில்ல...

சிலருக்கு கோபம் வந்தால் எதைச் சொல்வதென்றே தெரிவதில்லை ...! "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்று சொல்லுவார்கள் ... இது அவருக்கு பொருந்துமோ...

வித்தியாசமான நேரடி றிப்போட்டைத்தரவேண்டும் என்பதற்காக புகையிரதத்தல் ஆசனத்தை தேடி அமராமல் ஒவ்வொரு பெட்டிகளிலும் நடக்கும் சப்பவங்களை நோக்க விரும்பினோம்.

புகையிரதம் இரவு 7.15றிகு கோட்டை புகையிர நிலையத்தை விட்டுப் புறப்படுகின்றது ... பெட்டிக்கு பெட்டி யாறிச் செல்ல முடியாத அளவு சனக்கூட்டம் நின்று கொண்டு பயணத்தை மேற்கொள்கின்றது.

மூன்றும் வகுப்பு உறங்கல் இருக்கைக்குள் நுழைகின்றோம்... மின் விசிறிகள் சுழல்கின்றன. இடது கைப் பக்க ஆசனம் ஒன்றில் இருப்பவர் சுழன்று கொண்டிருக்கும் மின் விசிறியை தனது பக்கம் காற்று வரக்கூடிய முறையில் திருப்பி வடுகின்றார்...

"இவருக்கு மட்டும்தான் புழுங்குகிறதோ...! மற்றவர்களுக்கு காற்றுடி தேவையில்லையோ...! இவர் போன்றவர்களின் சுயநலத்தைப் பாருங்கள்... ஏன் இவர்களுக்கும் மற்றவர்களும் பயன் பெற வேண்டும் என நினைக்க மறுக்கிறார்கள் ... சுயநலம் என்பது தமிழர்களோடு கூடப் பிறந்ததோ ..?

மூன்றும் வகுப்பு உறங்கல் இருக்கைப் பொறுப்பாளர் கறுப்பு நிற உடை அணிந்து காணப்படுகிறார். அவர் அருகில் இரண்டு வாலிபர்கள் நின்று உரையாடுகின்றனர்... இருபது ரூபா கொடுக்கிறார்கள் ... அவர்களுக்கு பதிவு செய்து பயணம் செய்தவர்களின் ஆசனங்களைக் கொடுக்கின்றார்கள் ... அவர்கள் சிங்களத்தல் 'ஸ்தூமஸ்தி' (நன்றி) கூறி அமர்கின்றனர்.

அந்த வாலிபர்கள் இருவருடைய முகத்திலும் புன் சிரிப்பு...அது சாதாரண சிரிப்

**உதரன்**

பல்ல... உறங்கல் இருக்கையில் இடம்கிடைத்த வெற்றிப் புன் சிரிப்பு... அது.

புகையிரதம் பொல்காவலையை அடைந்துவிட்டது. இரண்டாம் வகுப்பு உறங்கல் இருக்கைக்குள் நுழைகிறோம்... "இரண்டு சோடிகள் இது புகையிரதம் என்பதை மறந்த நிலையில் இருந்தனர்... இவர்கள் புதுமணத் தம்பதிகளா...? என்ற சந்தேகம் எழுந்தது. அதற்குரிய அடையாளம் எதுவும் அவர்களிடம் தெரியவில்லை... "பயணம்... பயணம்... ...இது... ஆரம்பப் பள்ளிக்குப்... பயணம்..." இந்தப் பாடல் இடையில் புகுந்து விட்டது ..மன்னிக்கவும்...

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்பவர்கள் சற்று வசதியானவர்கள் அல்லது அரசாங்க சேவையில் இருப்பவர்கள் ... இப் பெட்டிக்குள் .. போத்தல் சத்தங்கள்...கேட்கிறது... சிகரெட் புகை சுறுள், சுறுளாகவும், திரள் திரளாகவும் செல்கிறது...

...பெரிய மனிதர்கள் பயணம் செய்யும் பெட்டியல்லவா...

...பெரிய இடத்து விவகாரங்கள் வெளியே தெரிவதில்லை முடி இல்லை...தெரியவருவதும் இல்லை... அது... ...

இடம்···

மூன்றும் வகுப்புப் பயணிகள் பெட்டிக்குள் நுழைகிறோம். ஆசனத்தில் இருப்பவர்களின் உரையாடல்கள் என் காதுக



## நேரடி றிப்போட்

ளில் விழுகின்றன...''தேட் கிளாஸ் 'சிலிப்பறெ'ட் புக் பண்ண... போட் ஸ்ரேசனுக்குப் போனு .. புக்கிங் முடிஞ்சுது... அது காலமையோடை முடிஞ்சுது... இப்படித்தான் சொல்லுறாங்கள்... ஒரு மணிக்குப் பிறகு நூறு ரூபா... காசோடை போனு... ரிக்கட் எடுக்கலாம்...இப்ப... காசு கொடுத்து எதுவும் செய்யலாம்...

இன்னொருவர் "யாழ்ப்பாண ஆசுப்பத்திரியில(ச) வரியில தொடங்கிற ஒரு டாக்டர் இருக்கிறார்... வாட்டில இருக்கிற ஆக்கள் ஒழுங்காப் பாக்க மாட்டார்... காசு கொடுத்தா வெளியில யாரையும் காசுக் கேற்ப எவ்வளவு நேரமும் பாப்பார்... அவ்வளவு காசுப் பேய் . !

டாக்டர்மாரே இப்பிடி இருக்கேக்க... குறைஞ்ச சம்பளம் எடுக்கிற இவர்கள்... எப்பிடி...லஞ்சம் வாங்காமல் இருப்பாங்கள்......

இவர்களது கதையைக் கேட்ட என் கவனத்தை அடுத்த பெட்டியில் இருப்பவர்களின் உரையாடல் கவர்ந்தது...''ரெலிபோனில்கதைச்ச விசயம் சரியா...அவள் பெட்டய வீடியோவில முதலிலேயே பார்த்தவனும் ...கண் கொஞ்சம் வாக்காம்...ஆளும் கறுப்பாய் இருக்கிதாம்...உயரமும் கட்டையாம்...தனக்கு விருப்பமில்லை எண்டு சொல்லியிட்டான்...அவனுக்கு விருப்பமில்லை எண்டாப் பிறகு... நான் என்னண்டு வற்புறுத்துகிறது...

"இந்தக் காலத்துப் பிள்ளையள் தகப்பன் தாயின்ரை சொல்லைக் கேக்குதுகள்... எல்லாம் தங்கட இஷ்டப்படி தான் நடக்குதுகள்... "ஏதும் கதைச்சுப்போட்டா... கடிதமும் போடமாட்டாங்கள்... எல்லாம் காலம் மாறிப் போச்சு...

புகையிரதம் அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது "அனுராதபுரத்தில் பலர் இறங்குகிறார்கள்... சில பெட்டிகளில் இருப்பதற்கு இடம் கிடைக்கிறது...

ஒரு பெட்டியில் இளைஞர் கூட்டம்... பாடல்களைப் பாடுகிறது... முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிரதம் வவுனியாவைக் கடந்துவிட்டால் தமிழ் பேசவே பயப்படுவார்கள். ஆனல் இன்று அனுராதபுர புகையிரத நிலையதில் புகையிரதம் நிற்கிறது. தமிழ்ப்பாடல ஒலிக்கிறது... "தோல்வி... நிலை என நினைத்தால் மனிதன்... வாழ்வை மறக்கலாமா ...வாழ்வைச் சுமை என நினைத்தால் தாயின் கனவை மறக்கலாமா—!

...பாடல் தொடர்கிறது... ரயில் பயணமும் தொடர்கிறது...மூன்றும் இருக்கைப் பெட்டி ஒன்று சலாகையால் இருப்பதைக் காண்கின்றோம் .. இதில் இருந்து நீண்ட தூரம் செல்ல முடியுமா? இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு யாழ். கொழும்பு புகையிரத சேவையால் மட்டும்தான் பெருமளவு வருமானம் கிடைத்து வருகிறது. ஆனல் அப்புகையிரத மூன்றும் இருக்கைப் பெட்டிகளில் உள்ள ஆசனங்கள் நல்ல நிலையில் இல்லை. சில இருக்கைகள் சலாகைகளால் அமைக்கப்பட்டுள்ளன.

பல பெட்டிகளின் இருக்கைகள் அழுக்காகக் காணப்படுகின்றன. இப்பெட்டிகளைப் பார்த்தால் தெரியும். இது எவ்வளவு காலமாக துப்பரவாக்கப்படவில்லை என்று...

கடந்த ஜனவரியில் ஐந்து கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாக்களை இலங்கைப்

... 6 ஆம் பக்கம் பார்க்க

## ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு ரேட்

கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல விரும்புகின்றீர்களா? மூன்றும் வகுப்பில் பயணம் செய்ய விரும்புவர்களுக்கு சீற்பிடித்துக் கொடுக்கப் பத்துரூ ா. இரண்டாம் வகுப்பில் பயணம் செய்து கொள்பவர்களுக்கு சீற்பிடித்துக் கொடுக்க பதினைந்து ரூபா; புகையிரத நிலையத்தில் உங்களுக்காக சீற்பிடிக்கக் பலர் காத்திருக்கிறார்கள். புகையிரத நிலயத்தில் நடைபெறும் புதுவிதத்தொழில் இது.

## உறங்கலிருக்கை 100 ரூபா

புகையிரதத்தில் பயணம் செய்ய உறங்கல் இருக்கை ஆசனங்களைப் பதிவு செய்ய கோட்டைப்புகையிரத நிலையத்திற்கு 10 மணிக்குப் பிறகுசென்றுலபதிவுமுடிந்துவிட்டது. சீற் இல்லை என்பார்கள் ஒருமணிக்குப் பிறகு 100 ரூபா கொடுத்தால் மூன்றும் வகுப்பு உறங்கல் இருக்கைக்கு ஆசனம் கிடைகின்றது இப்படியான நல்லகாரியத்தில் ஆசனப்பதிவில் ஈடுபடும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் ஒருவரும் ஈடுபட்டு வருகின்றாராம் என பிரயாணிகள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வி பெருதவர்க்கு தொழிற்கல்வி கைகொடுக்கும்

''காட்சிகள் மனிதனின் ஆற்றலை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, கண்காட்சியைப் பார்ப்பவர்களின் சிந்தனையையும் தூண்டிப் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழி வகுப்பதுமாகும்''

இவ்வாறு பளைக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் சேர்ந்து நடாத்திய முறைசார்ந்த, முறைசாரா கல்விக் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தொழில்நுட்பக் கல்வியதிகாரி ச. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்குக் கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா அவர்கள் தலைமை தாங்கினார். பளைக் கொத்தணியிலுள்ள 13 பாடசாலைகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டன.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்— ''கடந்த சில ஆண்டுகளாகக் கல்லூரிகளில் கண்காட்சி, கலைவிழா போன்றன செய்திடமுடியாத சூழ்நிலைகள் இருந்தன. நிலைமைகள் மாறி வரும் இவ்வேளைகளில் கல்விக் கண்காட்சி ஒன்றினை மிகுந்தளவு கவரும் வகையில் அமைத்திருப்பது மிகவும் பாராட்டுதற்கொன்றாகும். 0.4 வீத மாணவர்களுக்கும் குறைவானவர்களே பல்கலைக்கழகம் செல்லக்கூடியதாக இருக்கையில் மிகுதி மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியின் தொழிற்பாடப் பயிற்சி கைகொடுத்து உதவிடும் ஒரு செயலாகும்'' என்றார்.

## யாழ்-மட்டு.

# இரவு பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்—மட்டக்களப்பு இரவு பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மட்டக்களப்புப்பிரயாணிகள் சங்கம் வடக்கு—கிழக்குப் பிராந்தியப்போக்குவரத்துச் சபைகளைக்கேட்டுள்ளது.

தற்பொழுது தினசரி மட்டக்களப்பிலிருந்து விசேடபஸ் சேவை ஒன்றும்சாதாரண பஸ் சேவை ஒன்றும் நடத்தப்படுகின்ற போதிலும் இடநெருக்கடி காரணமாக தினமும் பல பிரயாணிகள் தமது பிரயாணத்தை தொடர முடியாது பல சஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

இரவு பஸ்சேவையும் ஆரம்பிக்கப்படுமாயின் பிரயாணிகளின்நெருக்கடியைதவிர்த்துக் கொள்ளக்கூடியதாகஇருக்கும்.

முன்னர்மட்டு- யாழ். இரவு பஸ் சேவை தினசரி நடைபெற்று வந்தது பின்னர் நாட்டு நிலைமை காரணமாக கடந்த சில வருடங்களாக இச்சேவை நடைபெறவில்லை.

தற்பொழுது கொழும்பு பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதனுல் அதற்கு பயன் படுத்திய பஸ்களை மட்டு இரவு சேவைக்கும்,கல்முனைச் சேவைக்கும் பயன்படுத்தலாமெனவும் ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது.(05)

# பருத்தி நகரை புனரமைக்க 450 லட்ச ருபாநிதி உதவி

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகள் யாவும் 450 இலட்ச ரூபா செலவில் இவ் வருடத்திற்குள் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளன

மேற்படி புனருத்தாரண வேலைகளுக்கென கனேடிய அரசு 45 மில்லியன் ரூபாவை ஸ்ரீ லங்கா தேசிய புனருத்தாரண அமைச்சிற்கூடாக வழங்கியுள்ளது.

இதில் நூற்றி எட்டு லட்ச ரூபா செலவில் இரு மாடிக் கட்டிட நவீன சந்தையும், பத்தொன்பது இலட்ச ரூபா செலவில் பொது நூலகமும், பதினைந்து இலட்ச ரூபா செலவில் நகரசபை அலுவலகக் கட்டிடமும் மூன்று இலட்ச ரூபா செலவில் திறந்த வெளியரங்கும், எட்டு இலட்ச ரூபா செலவில் கிளைநூலகமும், ஆறு இலட்ச ரூபா செலவில் உல்லாச விடுதியும், ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் சந்தை பொது மலசல கூடமும், அறுபத்தொன்பது லட்ச ரூபா செலவில் பஸ் நிலையமும், புனரமைக்கப்படும்.

இத்திட்டங்கள் யாவும் இவ் வருடத்தினுள் பூர்த்தியாக்கப்படவுள்ளது என பருத்தித்துறை நகரசபைச் செயலர் கே. சண்முகநாதன் தெரிவித்தார். (39)


★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும்

★ ஈராக்

நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | விவசாய மேற்பார்வையாளர் | (2) | I. D 130 |
| 2. | கிளீனஸ் மேற்பார்வையாளர் | (2) | I D 125 |
| 3. | கார் பெயின்டர் | (20) | I. D 100 |
| 4. | தச்சு தொழிலாளர் | (20) | I. D 80 |
| 5. | மேசன் தொழிலாளர் | (20) | I. D 80 |
| 6 | பிற்றர் (பொருத்துபவர்) | (20) | I. D 80 |
| 7. | விவசாயத் தொழிலாளர் | (50) | I. D 65 |
| 8. | கனரக வாகனச் சாரதி | (4) | I. D 110 |

(உணவு, வைத்தியம், தங்குமிடம் இலவசம்)
6 புகைப்படம், கடவுச்சீட்டுடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.

V·T·R·TRAVELS

41,3rd Cross street Jaffna

03111


# நெடுந்தீவில் குடிநீர்ப்பைபில் கறள்நீர் வருகிறது

நெடுந்தீவு மக்களிற்கு குடிநீர் வழங்குவதற்காக போடப்பட்டுள்ள குடி நீர் பைப்புக்களை குடி நீர் பெறுவதற்காக திறந்தால்| அங்கே வருவதுகுடிநீரல்ல கறள் நீரே. இந்தக்கறள் நீரையே மக்கள் குடிப்பதற்காக எடுத்துச் செல்வதை நேரில் காண முடிகிறதுநெடுந்தீவிற்கு குடி நீர் வழங்குதற்காக அமைக்கப்பட்டதொட்டி மிகவும் பழமை வாய்ந்தது இத்தொட்டி அடிக்கடி கழுவிச்சுத்தம் செய்யப்படுவதில்லை யெனவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக இத்தண்ணீர்த்தொட்டிதிருத்திஅமைக்கப்பட வேண்டுமென இப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட விடுதலைப்புலிகளிடம்மக்கள் எடுத்துச்கூறினர்.(24)

# இணைப்புச் சேவை ஆரம்பிக்கப்படுமா?

பருத்தித்துறை - காங்கேசந்துறை 763-ம் இலக்க பஸ் சேவை முன்பு அதிகாலை 5 மணிக்குப் புகையிரதப் பிரயாணிகளது போக்குவரத்திற்கு வசதியாக மேற்கொள்ளப்பட்டது. பின்பு காலநிலை சீராக இல்லாத காரணத்தால் புகையிரதச்சேவை நிறுத்திவைக்கப்பட்டது. பஸ்சேவையும் நிற்பாட்டப்பட்டது. மீண்டும் தற்போது புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் 763 பாதை இலக்க பஸ்சேவை மீண்டும் காலை 5 மணிக்குப் புறப்பட்டு புகையிரதம் புறப்படமுன் காங்கேசந்துறையை சென்றடைய வசதியாக ஓடவேண்டுமென வல்வைப் பிரயாணிகள் சங்கத்தவர்களும் வல்வை சனசமூக நிலையமும் இ. போ. ச. பருத்தித்துறை டிப்போவைக் கோரியுள்ளது. (22)

# நூல் இலவசம்

கவியோகி சுத்தானந்தபாரதியார் அமரத்துவம் எய்திய நினைவாக மில்க்வைற் தாபனத்தார் அவர் அருள் வாக்குகளைத் தொகுத்து ''உலகப் பொது நெறி'' என்னும் நூலை வெளியிட்டுள்ளார்கள். இந்நூல் வேண்டுவோர், சுயவிலாசமிட்டு ரூபா. 1/- முத்திரை ஒட்டிய என்வலப் அனுப்பி இனமாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

# புள்ளிவிபர அதிகாரி மியூனிச் பயணம்

மன்னார் மாவட்ட புள்ளிவிபர அதிகாரியாகக் கடமையாற்றி வரும் மகேந்திரலிங்கம் ஜேர்மன் சமஸ்டிக் குடியரசினுல் வழங்கப்பட்டபுலமைப் பரிசிலைப் பெற்று அண்மையில் ஜேர்மன் சமஸ்டிக் குடியரசின் தலைநகரமான மியூனிச் செல்லவுள்ளார்.

இவர் அங்கு தங்கியுள்ள காலத்தில்தொகைமதிப்புபுள்ளிவிபரவியல் போன்றவற்றில் பயிற்சி பெறுவார்.

மகேந்திரலிங்கம், கொழும்பு யாழ்ப்பாணம்ஆகியமாவட்டங்களில்,புள்ளி விபர அதிகாரியாக கடமையாற்றி இருப்பதுடன் கம்பியூட்டர் கல்வியிலும் பயிற்சிபெற்றவர்என்பதுகுறிப்பிடத்தக்கது,(16)

# பாடசாலைகட்டிடம் திருத்தப்படும்

இறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்றோர் அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பலவருடமாகதிருத்தபடாதப் பாடசாலை கட்டடம் திருத்தப்படுதல் பாடசாலைக்கு தண்ணீர்வசதிஏற்படுத்தல் அதிபரைநிரந்தரமாக்குவது என்பனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களாகும்.

# கிளிநொச்சி மில்க்கோ நிறுவனம் மீள இயங்க நடவடிக்கை

கிளிநொச்சியில் இயங்கி வந்த மில்க்கோ நிறுவனம் கடந்தகால வன்செயல்களால் 1986ம் அண்டு மூட்ப்பட்டது தற்போது இதை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பால் பதனிடும் கருவிகளும் கட்டடங்களும் பழுது பார்க்கும் வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது.

இந் நிறுவனத்தில் பைக்கட் பால், தயிர், நெய், யோக்கட் என்பனதயாரிக்கப்படும் இதற்குத் தேவையான பால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும். பால் பற்றாக்குறை ஏற்பட்டால் முல்லைத் தீவு, வவுனியா,ஆகிய வெளிமாவட்டங்களிலிருந்து பால் கொள்வனவு செய்யப்படும், என்றும் இந் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் திரு கோ. நடராசா அவர்கள் தெரிவித்துள்ளார் (35)

# கல்வியங்காட்டில் களவுகள்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் உள்ள கடையொன்று அண்மையில் முன்கதவு உடைக்கப்பட்டுக் களவாடப்பட்டுள்ளது பால்மா வகைகள், சில்லறைப் பணம், அரிசி, சர்க்கரை, சீனி போன்ற பொருட்கள் களவாடப்பட்டன.

சில நாட்களுக்கு முன்னர் இதேயிடத்தில்தான் வீட்டைப் பூட்டிவிட்டு கொழும்புக்கு சென்ற ஒருவரின் வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் போன்ற பொருட்கள் களவாடப்பட்டன.

## மட்டு. மாவட்டத்தில்

# மீன்களுக்கு வைரஸ் தோற்று; மீனுணவை தவிர்க்க ஆலோசனை

மட்டக்களப்பு வாவி மற்றும் உன்னிச்சை, றூகம், வாகனேரி ஆகிய குளங்களில் உள்ள மீன்களுக்கு ஒருவகை வைரஸ் நோய் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த மீன்களை பொதுமக்கள் உண்ண வேண்டாம் எனவும் மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெப்பநிலைஅதிகரித்துள்ளமையே இந்த மீன்களுக்கு வைரஸ் நோய் ஏற்படக் காரணம் என மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி பரிசோதகர் எஸ். ரி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

மீன்களுக்கு புண் ஏற்பட்டு சில நாட்களில் அவை இறப்பதாகவும், மீன்களின் கண் பகுதிகளிலும் வால்ப் பகுதியிலும் புண்ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

உன்னிச்சைக் குளப்பகுதியில் பெருமளவு மீன்கள் இறந்து கரை ஒதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து மட்டக்களப்பு கச்சேரி உயர் அதிகாரிகள் மீன்பிடித் திணைக்கள உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அப்பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டு இறந்த மீன்களை யாரும் உண்ண வேண்டாம் என கேட்டுக் கொண்டது.

# புனர்வாழ்வு அமைச்சர் வவுனியா வருகிறார்

புனர்வாழ்வு,புனர் நிர்மாண அமைச்சர் கௌரவ. வின்சன் பெரேரா, எதிர்வரும் 31ம் திகதி வவுனியா வரவுள்ளார்.

வவுனியாவில் இடம் பெற்று வரும் புனர் நிர்மாண வேலைத் திட்டங்களைநேரில் கவனிக்கும் பொருட்டே இவர் வருவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருடன் அமைச்சின் உயர் அதிகாரிகளும் வரவிருப்பதாக தெரியவருகின்றது.(11)

# யாழ். கோட்டப் பிரிவு தமிழ்த்தினப் போட்டி

யாழ். கோட்டக் கல்விப் பிரிவுப் பாடசாலைகளுக்கிடையேயானதமிழ்த்தினப்போட்டிகள் இம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கொத்தணி, தனியார்பாடசாலை, தேசிய பாடசாலை மட்டத்தில்நடத்தப்படும் பூர்வாங்கப் போட்டிகளில் முதலிடம் பெறுவோர் கோட்டமட்டத்திலான இப்போட்டியிற்கலந்து கொள்வர்.இதற்கான ஒழுங்குகளைக் கல்விஅதிகாரி திரு.த. [illegible] மேற்கொண்டுவருகிறார். (40)


# உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொது மக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டிடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ, தேவைப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

பிரதி முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,
இல. 52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

03150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய செய்திகள்

## மட்டக்களப்பு அரச அதிபராக யோகநாதன்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக ஆர். யோகநாதன் நியமிக்கப் பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது

இவர் புனர்நிர்மாண, புனர் வாழ்வு அதிகாரியாகவும், மேல திக அரசாங்க அதிபராகவும் மட்டக்களப்பில் பணியாற்று வார் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அலுவலகம் கடந்த எட்டு மாதங்களாகப் பூட்டப்பட்டிருந்தது குறிப்பி டத்தக்கது.

## பாத்திரங்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட் பட்ட பதினொரு கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்க ளுக்கு அண்மையில் அலுமினிய பாத்திரங்கள் வழங்கப்பட் டன.

இன்னொரு தொகைப்பாத் திரங்களை மீண்டும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வழங்குவதற் குரிய நடவடிக்கைகளை கிராம சேவை அலுவலர் உதவியுடன் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் அவர்கள் செய்துவருகிறார். (18)

## சுவாமிகள் விஜயம்

இந்துகலாசார அமைச்சிற்கு நல்லைஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் சமீபத்தில் விஜயம் செய்தார்

அவருக்குஅங்குவரவேற்பளித்த இந்துக் கலாசார அமைச்சர் திரு. பி. தேவராஜ்' சுவாமி களின் வருகையால் தமது அமைச்சு பெருமைப்படுவதா கக் கூறினர்,

## யாழ்.ரயில் பரிசோதனை நிறுத்தம்

யாழ்-கொழும்பு ரயில்கள் இதுவரை காலமும் பளையில் நிறுத்தப்பட்டு ஆயுதம்தாங்கிய இளைஞர்களால் சோதனை யிடப்பட்டு வந்தது. இரவு தபால் ரயில்ஓடத்தொடங்கிய தையடுத்து இந்தச்சோதனை நிறுத்தப்பட்டுள்ளது (ப)

## செஞ்சிலுவைச் சங்க வீடமைப்புத் திட்டம்

யாழ் குடா நாட்டில் புதி தாக வீடமைப்புத்திட்ட மொன்றை உருவாக்க யாழ்ப் பாணம் செஞ்சிலுவைச்சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. (24)

## பகுதித் தலைவராக நியமனம்

கடந்த 18 வருடங்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி யில் உதவிஆசிரியராகக்கடமை யாற்றிவரும்வே. தம்பாபிள்ளை கல்லூரியின் பகுதித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். செல்வி ஆர் மண்டல நாயகம் இளைப்பாறியதையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள் ளது. (30)

## எழுச்சி விழா

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி கலை கலாசார அவை எதிர் வரும் சித்திரை மாதம் 12-ம், 13-ம், 14-ம் திகதிகளில் மாபெரும் எழுச்சி விழாக்களை கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தத்திட்ட மிட்டுள்ளது. (4)

## மானி. மகளிர் இம்முறை சாதனை

1989ம் ஆண்டு க. பொ. த உயர்தர வகுப்பின் பெறுபேற் றின் அடிப்படையில் மானிப் பாய் மகளிர் கல்லூரியில் பல்க லைக்கழக புதுமுகத் தகுதி பெற் றோர் எண்ணிக்கை சென்ற வருடம் 47 இலிருந்து இவ்வரு டம் 62 ஆக அதிகரித்துள்ளது. மூன்று நான்கு பாடங்களில் சித்தி எய்தியோர் தொகை85, ஆக அதிகரித்துள்ளது இதில் 2ஏ 2சி பெற்ற மாணவி ஒருவ ரும் ஏபி 2சி பெற்ற மாணவி கள் அறுவரும் அடங்குவர். சென்ற வருடம் 7மாணவிகள் பல்கலைக்கழகப்பிரவேசம் பெற் றனர் என்பது குறிப்பிடத் தக் கது. இவ்வருடம் இவ்வெண் ணிக்கை கூடலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## கொடுப்பனவு

இலங்கை வங்கியின் ஆஸ்பத் திரி வீதிக்கிளையில் இன்று ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப் பாய் கிராமசேவகர் பிரிவைச் சேர்த 642 குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

# விரைவில் இலங்கையும் விண்வெளி ஆராய்ச்சியில்

விரைவில் இலங்கையும் விண் வெளி ஆராய்ச்சிகளில்இறங்கக் கூடிய வாய்புகள் உள்ளதாக சோவியத் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் விளாடி மிர்லெக்கோவ் தெரிவித்துள் ளார்.

தனது பொருளாதார வளத்தை அதிகரிக்கும் பொருட்டு இலங்கை விண் வெளியில் இறங்குவதுதவிர்க்க முடியாது. இதற்கு மொரட்டு வையில் உள்ள ஆர்தர் கிளாக் விண்தொழில் நுட்ப நிறுவனம் உதவமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆர்தர் கிளாக் நிறுவனம் விரிவான முயற்சிகளைச் செய்து வருவ தாகவும் தெரிவிக்கப்படு கிறது.

### தீவுப்பகுதிச் சேவைக்கு

# அம்புலன்ஸ் மோட்டர் படகை செஞ்சிலுவைச் சங்கம் வழங்குமா

தீவுப்பகுதியில் கடுமையாக நோயுறுவோரை யாழ்ப்பா ணம் அல்லது ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை களுக்கு எடுத்துவருவதற்கு அம் புலன்ஸ் மோட்டார்பட கொன்று இருக்கவேண்டியதன் அவசியம் தற்போழுது வலியு றுத்தப்பட்டு வருகின்றது.

இப்படியொரு அம்புலன்ஸ் சேவை அங்கிருப்பின் பல உயி ரிழப்புக்களும், வைத்திய சேவையில் ஏற்படும்காலதாம தம், சிரமம் என்பவனவும் தவிர்க்கமுடியுமெனவும் தெரி விக்கப்படுகின்றது.

இத்தகைய தொரு அம்பு லன்ஸ் மோட்டார்படகினைத் தீவுப்பகுதிசேவைக்கென வழங்கவேண்டுமென யாழ் செஞ்சிலுவைச்சங்கவேலணைப் பிரதிநிதி செ. வரதலிங்கம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளார். (24)

### மன்னார் மாவட்டத்தில்;

# பயிலுநர் ஆசிரியராக 300 பேர் நியமனம்; மேலும் சிலருக்கு நியமனம் வழங்கவும் முயற்சி

மன்னார் மாவட்டத்தில் பயி லுநர் ஆசிரியர்களாக முந் நூறு பேர் நியமிக்கப்பட்டுள் ளனர். மன்னார் கல்விப்பணிப் பாளர் சுந்தரலிங்கத்தின் முயற்சியால் மேன்முறையீடு செய்தவர்களில் நியாயமாகக் கருதப்பட்டவர்களுக்கு நியம னங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்குக் கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவரும், செயலாளரும் ஐம்பது மேல திக ஆசிரிய வெற்றிடங்களை மன்னாருக்கு வழங்கினர்.

நேர்முகப் பரீட்சையின் போது போலிச்சான்றிதழ்கள் பல கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப் பட்டன தகுதியுடைய யாவ ருக்கும் நியமனம் வழங்கப் பட்டது.

அரச திணைக்களங்களால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ்கள் மட்டுமே அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. இரண்டாவது நேர்முகப் பரீட் சையின் போது புதிதாகவழங் கப்பட்ட சான்றிதழ்கள் எது வும் ஏற்றுக் கொள்ளப் பட வில்லை.

ஜனசவியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சில புள்ளிகள் பிழையானவை என்று ஐயப் பாடு எழுந்த விண்ணப்பதாரி களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாகக் கொழும்பில் உள்ள கல்விச்சேவை ஆணைக் குழுவிடம் ஆலோசனை கோரப் பட்டுள்ளது இவ் ஆலோசனை யின் பேரிலேயே மிகுதியான வெற்றிடங்களுக்கு இம்மாத இறுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட ஆசி ரியர்களுக்கான நியமனக் கடி தமும், அவர்களுக்கான பாட சாலையும் மன்னார் அல் அப் ஹார் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# சிறந்த சாரதி. நடத்துனர் தெரிவுப்போட்டி விரைவில்

வடபிராந்திய போக்கு வரத் துச்சபை கடமையிலிருக்கும் போது மரணித்த ஊழியர்க ளின் நினைவாகபலபோட்டிகளை நடாத்துவதற்கு திட்டமிட் டுள்ளது.

சிறந்த சாரதி. சிறந்தநடத்து னர், சிறந்த இயந்திரவிபலா ளர் தெரிவுப்போட்டிகள் இவற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

அத்துடன் மாவட்டரீதியாக பாடசாலை மாணவர்கள் மத்தி யில் கட்டுரை, பேச்சுப் போட்டி களும் நடாத்தப் படவுள்ளன.

யாழ்ப்பாணம்பருத்தித்துறை காரை நகர், கிளிநொச்சி, முல் லைத் தீவு, வவுனியா, மன்னார் டிப்போ மட்டங்களில் இப் போட்டிகள் நடாத்தப்படும்' (41)

### யாழ் மாவட்டத்தில்

# 5-வது தொடர் உணவு முத்திரை அடுத்தவாரம் வழங்கப்படும்

யாழ்மாவட்டத்தில் 5 வது தொடருக்கான உணவு முத் திரைகள் அடுத்தவாரம் வழங் கப்படவுள்ளது. 4ம் சுற்று உணவு முத்திரைகள் இம் மாதத்துடன் முடிவடைகின் றன.

ஏப்ரல் மாதத்தில் இருந்து 5 வது தொடர் உணவு முத் திரைக்கு பலநோக்கு கூட்டுற வுச் சங்கங்களில் உணவுப் பொருட்கள் வழங்கப்படும்

# கிணற்றில் வீழ்ந்து காட்டுயானை மரணம்

வவுனியா பாலமோட்டை பகுதியில் உள்ள மருதமடு என்னுமிடத்தில் பாழடைந்த கிணற்றினுள் காட்டு யானை ஒன்றுதவறி வீழ்ந்து மரணமாகியுள்ளது இந்த யானையினை மீட்பதற்கு அவ்வூர்மக்களும், கிராமசேவை யாளரும் பெரும் முயற்சியினை எடுத்தபோதும்அதுபயன் தரவில்லை என கச்சேரி அதிகாரிஒருவர் தெரிவித்தார். (11

# பாஸ்போட் விண்ணப்பத்துக்கு பணம் மட்டுமே ஏற்கப்படும்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற் கடவுச்சீட்டுச் சம்பந்தமான விடயங்களுக்கு முத்திரைக்குப் பதிலாகப் பணமே தற்போது செலுத் தப்பட்டு வருகின்றது. இம் முறை அண்மையில் கொண்டு வரப்பட்ட போதிலும் பலர் இதனைப் பின்பற்றவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின் றது.

கடவுச்சீட்டுக்கள் பெறுதல், புதுப்பித்தல், கடவுச்சீட்டுப் பிணைப்பணம் என்பன பண மாகவே தற்போது செலுத் தப்பட வேண்டும். எக்கார ணம் கொண்டும் முத்திரை கள் ஒட்டக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களுக்கான புதிய கடவுச்சீட்டுப்பெற ரூபா 300, கடவுச்சீட்டுப் புதுப் பிக்க ரூபா 40, எல்லா நாடு களுக்கான கடவுச்சீட் டுப்பிணைப்பணம் ரூபா ஆயிரம் தொகையைக் கணக்கிட்டு திணைக்கள கருமபீடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

# உள்ளக பட்டப்பின் பயிற்சிக்கு பட்டதாரிகள்விண்ணப்பிக்கலாம்

அரசாங்கப் பாடசாலைகளி லும், ஆசிரிய கலாசாலைகளி லும், கல்விக்கல்லூரிகளிலும், கடமைபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி அதி பர்கள், இலங்கைக் கல்விச் சேவைப் பட்டதாரி உத்தியோ கத்தர்கள் ஆகியோரிடமி ருந்து ஒரு வருட உள்ளக கல் வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

தமிழ்மொழி விண்ணப்ப தாரிகளுக்கான பயிற்சி நெறி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டம் பெற்ற பின்னர் சேவையில் சேர்ந்த ஆசிரியர்கள், அரசினர் பாட சாலை, ஆசிரியகலாசாலை கல் விக் கல்லூரி ஆகிய ஏதாவ தொன்றில் பட்டதாரி ஆசிரிய ராக மூன்று வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான அனுபவத்தைப் பெற்றிருந் தால் மட்டுமே இதற்கு விண் ணப்பிக்கலாம்.

பட்டம் பெறுமுன்னர் சேவையில் சேர்ந்த ஆசிரியர் கள் ஐந்து வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவம் பெற்றி ருப்பதுடன் அவற்றுள் குறைந் தது மூன்று வருடம் பட்ட தாரி ஆசிரியராகக் கற்பித் தல் அனுபவம் பெற்றித்தல் வேண்டும.

மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங் கள் ஏப்ரல்மாதம் ஆறும் திக திக்கு முன்னர் பரீட்சை ஆணை யாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். தகமை பெற்ற விண்ணப்பதாரிகள் ஏப்ரல் 28-ம் திகதி கொழும்பில் எழுத்துப்பரீட்சைக்குத் தோற் றல் வேண்டும்.

# திருமறை கலாமன்ற கலைவிழா 'ஒருகண்ணோட்டம்'

கடந்த 05.03 90 திங்கட் கிழமை அன்று யாழ் திருமறைக் கலாமன்றம் நடத்திய கலைவிழா நிகழ்ச்சியின் இறுதி நாளான திங்கட்கிழமை மாலை நடத்தப்பட்ட 'நீ ஒரு பாறை' நாட்டுக்கூத்து பற்றி ஒரு சில கருத்துக்களை வெளியிடுகிறேன்

● தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான நாட்டுக் கூத்து' மிகவும் பழமை வாய்ந் தது. கடந்த சிலவருடங்களாக இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை பெறவில்லை நீண்டகால இடை வெளிக்குப் பின்பு இப்படிப் பட்ட ஒரு நிகழ்ச்சியை நாம் பார்க்க சந்தர்ப்பம் கொடுத்த தற்கு நன்றி கூறவேண்டும்.

● பத்து வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற நாட்டுக் கூத்துகளுக்கும் இப்போது திரு மறைக்கலாமன்றம் வழங்கிய இந்த நாட்டுக் கூத்துக்கும் எவ் வளவோ வித்தியாசங்கள் உள் ளது. முன்பு எல்லாம் நடிப்பு குறைவாகவே இருக்கும்' நீ ஒரு பாறை' நாட்டுக்கூத்தை எடுத் துப்பார்க்கையில் அதில் பாடல் கள், நடிப்பு காட்சி அமைப்பு அத்தனையும் சிறப்பாகஉள்ளது பாத்திர அமைப்புகளை எடுத் துப் பார்க்கையில் அவரவர்க்கு ஏற்ற முறையில் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அந்நாடகத்தின் நெறியாள ரைப் பாராட்டவேண்டும்,

● தென்மோடி நாடகங் கள் குறிப்பாக கத்தோலிக்க மக்கள் வாழும் பகுதிகளில் தான் அரங்கேற்றப்படுகிறது. வடமோடி நாடகங்கள் சைவ சமய மக்கள் மத்தியில் அரங் கேற்றப்படுகிறது வடமோடி யாக இருந்தால் என்ன தென் மோடியாக இருந்தால் என்ன எல்லாம் தமிழர் எங்களது பாரம்பரிய கலையாகும் அதை நாங்கள்தான் கட்டிக்காக்க வேண்டும் ஆகவே யாழ் திரும றைக்கலாமன்ற இயக்குநர் அருட் திருமரிய சேவியர் அடி களாரின் தமிழ் உணர்வுக்கும் அவரது முயற்சிகளுக்கும் தமிழர் நாம் அனைவரும் நன்றி கூற வேண்டும் ஏனென்றால் சாதி சமய வேறுபாடின்றி அவர் தமிழர் கலை, கலாசா ரத்துக்காக உழைத்து வருகி றார். அவரது பணி தமிழர் வாழும் இடமெல்லாம் தொடரவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

● 'நீ ஒரு பாறை' நாட் டுககூத்தை ஒரு பெரிய அரங்கில் மீண்டும் மேடை யேற்றி இந்நாடகத்தை பாராத மக்கள் அனைவருக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

S. பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜே.ஆரும் அவசரகாலச்சட்டமும்

# நோயை உண்டாக்கியவரே பரிகாரமும் கூறுகின்றார்

(கொழும்பு)

''ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ ஜனநாயகக் கோட்பாடுகளை மனப்பூர்வமாகப் பின்பற்றி வருகின்றார்'' என்று முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

பொதுநல அமைப்புத் தினத்தை முன்னிட்டு இவ்வமைப்புச் சங்கம் கொழும்பு தப்பரபேன்ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையிலும் அதற்கு வெளியிலும் இருந்து எழக்கூடிய ஜனநாயத்துக்குமாறான எதிர்ப்புச்சக்திகளை முறியடிப்பதற்கு திரு. பிரேமதாஸவுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் ஆதரவு வழங்க வேண்டியது ஜனநாயகக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டுள்ள சகலரினதும் கடமையுமாகும்' என்றார் திரு. ஜெயவர்தன.

''சிவில் அரசியல் யாப்பு மற்றும் அடிப்படை உரிமை விவகாரங்களைப் பொறுத்த மட்டில் திருத்தம் கொண்டு வருவதற்கு அபிப்பிராய வாக்கெடுப்பு அவசியமானது'' என்றார் அவர்.

''ஜனநாயக நாடுகளுக்குஒவ்வாத பயங்கரவாத வன்முறைகளிலிருந்து இலட்சக்கணக்கான அப்பாவிமக்களின் உயிர்களையுப் பாதுகாப்பதற்காக அவசர காலச் சட்டங்களின் உதவியை நாடவேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது'' என்று கூறிய அவர் இத்தகைய ஆபத்துகள் நீங்கியதும் இச்சட்டங்கள் நீக்கப்படுமெனத்தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில்தான் அவசரகாலச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுக் கடுமையாகத் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கனகாம்பிகைக் குளத்தில் மேஜர் கமல் நினைவு மண்டபம்

வீர மரணமடைந்த விடுதலைப் புலிகளின் போராளி மேஜர் கமல் அவர்களின் ஞாபகார்த்தமாக எதிர்வரும் 23ஆம் திகதி கனகாம்பிகை குளத்தில் பொதுமக்களால் அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் சந்திரன் கலந்துகொள்வார். கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு போராளிகளான சீதா, சுந்தரி, ராதை ஆகியோரும் இதில் கலந்துகொள்வர்.

## கிளிநொச்சி டிப்போவில் பழைய பஸ்கள் பாவனையில்

கிளிநொச்சி டிப்போவிலுள்ள பல பஸ்கள் பாவிக்க உதவாத நிலையிலேயே பாவிக்கப்படுகிறது. கிளிநொச்சி - யாழ்ப்பாணம் சேவையிலீடுபடும் சுமார் நான்கு பஸ்கள் மிகவும் பழையனவாகவே உள்ளன.

புதிய பஸ்கள் மேற்படி டிப்போவுக்கு வரத் தாமதமானாலும் இந்தப் பழைய பஸ்கள் இடையிடையே இயந்திரக் கோளாறு ஏற்பட்டுநிறுத்தப்படாதவாறாயினும் திருத்தப்பட்டு பாவனைக்கு விடப்படலாம் என பிரயாணிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (4)

## நிதிஒதுக்க அமைச்சர் கோரிக்கை

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் முன்னர் ஐம்பது லட்சம் ரூபா செலவில் நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்த மூன்றுமாடிக் கட்டிடத்தை விரைவில் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரப்படவேண்டும் என கொழும்பிலுள்ள உயர் கல்வி விஞ்ஞானத்துறை தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப் ஏ சி. எஸ். ஹமீத்துடன் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் எஸ் இராஜேந்திரா மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்

## வன்னியில் லயன்ஸ் கழகம்

வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது இக்கழகத்தின் தலைவராக வைத்திய கலாநிதி எஸ். இளங்கோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (11)

## மருந்து தட்டுப்பாடு

வடமராட்சி கிழக்கு பகுதியிலுள்ள மருதன்கேணி கிராம வைத்தியசாலை, முள்ளியான், அம்பன் மருந்துச் சாலைகளில் மிக முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது (18)

## பாய்ந்தோடக் காலகள்..

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புகையிரத திணைக்களம் வருமானமாகப் பெற்றது ஆனால் வருமானத்தைத் தரும் இப் புகையிரத சேவையை கவனிக்கஏன் புகையிரதத் திணைக்களம் முன்வரவில்லை.

நீண்டதூர புகையிரதம் வசதிகளையும் துப்பரவையும் கொண்டதாக இருக்க வேண்டும்... ஆனால் சில பெட்டிகளில் மின் விசிறியைக் காணவில்லை. இன்னும் சில பெட்டிகளில் ஜன்னலகளைக் காணவில்லை. வேறு சில பெட்டிகள் மழை பெய்தால் ஒழுகின்றன... மின் குமிழ்கள் இல்லாத பெட்டிகளும் இருக்கத்தான் செய்கின்றன... லாபம் தரும் புகையிரத சேவையின் குறைகளை நிவர்த்தி செய்ய புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் முன்வருவார்களா...

பொழுது மெல்ல விடிகிறது. நேரம் 5 மணி 55 நிமிடம். வெளியே எட்டிப் பார்க்கிறோம்... அது யாழ்ப்பாணப் புகையிரத நிலையம். ரவலிங் பாக்கை தூக்குகிறோம்... முரசொலி அலுவலகம் நோக்கி நடக்கிறோம்... "... வந்துவிட்டதா''... ஆச்சரியத்தோடு வி[illegible]கிறார் ஒருவர்...!

## சுவையான செய்திகள்

### ஒரு நிர்வாணமான உண்மை

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் கிராமத்து ஏழை விவசாயிகளுக்கு''பாங்க்ஒஃப் பிகார்''என்ற வங்கி ஏராளமாகக் கடன் வழங்கியிருந்தது. நாட்கள் பலவாகியும் வட்டியும் வசூலாகவில்லை. அசலும் தேறவில்லை. காரணம், கடுமையான வரட்சி பயிர், பச்சையெல்லாம் பரிதாபமாகக் கருகிவிட்டன.

ஆனால், வங்கி அதிகாரிகள் தங்கள் வழமையான கெடுபிடி நடவடிக்கைகளை, அந்த ஏழைவிவசாயிகளிடம் மேற்கொண்டனர். அதிகாரமிரட்டலும், ஆணவத் தோரணையும் அதிகரித்தன பொறுமை இழந்து பொங்கிய விவசாயி ஒருவர் என்ன செய்தார் தெரியுமா? காசை எடுத்துவை என்று சொல்லியவண்ணமிருந்த வங்கி அதிகாரிகளிடம், தான் கட்டியிருந்த வேட்டி, சட்டை, ஜட்டி முழுவதையுமே கழற்றி எறிந்துவிட்டு, ''இவை தான் எனது பாரியச்சொத்துகள். எடுத்துக் கொள்ளுங்கள் இவற்றை!''எனக் கூறிவிட்டு முழு நிர்வாணமாக ஓடிப்போய்விட்டார், அதிகாரிகள் பாவம்! கண்ணைப் பொத்திக் கொண்டே காசை வசூலிக்கமுடியாமல் வீடு திரும்பினார்கள்.

### வேலைக்குவேட்டு வைத்தமீசை

எட்வேட் மேஃபி என்ற பொலிஸ்காரர் 1969ஆம் ஆண்டு அமெரிக்காவின் மாநிலப் பொலிஸ் நிலையமொன்றில் வேலைக்குச் சேர்ந்தார். அவருக்கு மிகப் பெரீ..ய மீசை! அது. பார்ப்போரைப் பிரமிக்க வைக்கும் ஒரு பேரதிசயமாக இருந்தது பொலிஸ்காரர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் மீசையை வளர்க்கக் கூடாது என்று, அந்த மாநிலப் பொலிஸ் சட்டத்தில் விதியொன்று கொண்டுவரப்பட்டது 1986ஆம் ஆண்டு உயரதிகாரிகள் நீண்ட நெடும் மீசைக்கார எட்வேட் மேஃபியைக் கூப்பிட்டுமேற்படிசட்ட விதிக்கமைய நடந்துகொள்ளுமாறு எச்சரித்தனர் ஆனால்மீசைஇருந்த இடத்தில் இருந்தபடியே இருந்து கொண்டிருந்தது. கூடவே, மேலும் வளர்ந்து கொண்டும் இருந்தது எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதால், எட்வட் மேஃபியின் நான்கு நாட் சம்பளத்தைப் பிடித்துக் கொண்டது பொலிஸ் நிர்வாகம் அதற்குப் பின்பும் 'மீசைக் காதல்' அணுவளவும் அசையவில்லை. அந்தப் பொலிஸ்காரருக்கு. இறுதி நடவடிக்கையாகப் பொலிஸ் வேலையிலிருந்தே 'கல்தா' கொடுக்கப்பட்டது. எதிர்த்து வழக்குப் போட்டார் எட்வேட்மேஃபி. ஒன்றுமே சரிப்பட்டு வரவில்லை வளர்த்த மீசை மீது கொண்டஅற்புத காதல், கிடைத்த வேலையையும் அல்லவா, கௌவிக் கொண்டு போய் விட்டது!

## முரசொலிக்கு வந்த கடிதம்

### ஆசிரியரிருந்தால் மாணவரில்லை மாணவரிருந்தால் ஆசிரியரில்லை

ஆசிரியர்,
முரசொலி

யாழ் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் பாடசாலை வேலைக்காக பாடநேரங்களில்வெளியில்செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள் குறிப்பாக மதியபோசன உணவை தயாரிக்கும் உணவுப்பொருட்களை சேகரிப்பதற்காக இவர்கள் வெளியே அனுப்பப்படுகிறார்சள் இதனால் மாணவர்கள் கல்வி கற்கும் நேரத்தை இழந்து விடுகிறார்கள். இது இவ்வாறிருக்க சில ஆசிரியர்கள் சுயநலம் கருதி பாடநேரங்களில் வெளியேறுகின்றனர். நிர்வாகம் அக்கறையின்றி இருந்தமையால் ''விவேகானந்தா சைவ நெறி'' பரீட்சை இப்பாடசாலையில் நடைபெறவில்லை. இந்நிலை தொடருமா? பொறுப்பானவர்கள் கவனம் எடுப்பார்களா?

யாழ்ப்பாணம்

ச. தீபா
ா நரேஸ்

### சங்கானை வைத்தியசாலையில் அம்புலன்ஸ் உண்டு; சாரதி இல்லை

ஆசிரியர்
முரசொலி

சங்கானை வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் எட்டு மைல் தூரத்தில் இருக்கின்றது. சங்கானை வைத்தியசாலை ஆரம்பகாலம் தொடக்கம் சுற்றியற் கூறு தரத்திலேயே இருக்கின்றது. இவ் வைத்தியசாலையில் கட்டிடங்களும் பழையநிலையிலேயே இருக்கின்றன. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சிறுபிள்ளை வார்ட் கட்டப்பட்டும், இதுவரை இவற்றிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படவில்லை. தற்போது இவ்வைத்திய சாலைக்கு நோயாளர் வருகைகூடியுள்ளபோதிலும், வைத்திய உபகரணங்கள், போதிய வைத்தியர்கள், தாதிகள் ஆகியோர் நியமிக்கப்படவும் இல்லை இங்கு கடமையாற்றி வந்த வைத்திய அதிகாரி (M O) விடுதலையில் சென்று கடமைக்குச் சமூகமளிக்காமையால், அப்பதவி வெற்றிடமாகவேயுள்ளது. தற்போது பல் வைத்திய அதிகாரியே பொறுப்பதிகாரியாகக்கடமையாற்றுகின்றார். 3 வைத்திய அதிகாரிகள் வகிக்கவேண்டிய இடத்தில் அதற்குப்பதிலாக ஒரேயொருநிரந்தர உதவி வைத்தியரே கடமையாற்றுகின்றார். அவருடன் பதில் உதவி வைத்தியர் ஒருவரும் கடமையாற்றுகிறார். இவ் வைத்தியசாலைக்குத் தாதிகளை நியமித்து நோயாளிகளின் கஷ்டங்களைப் போக்குமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அதற்கு இற்றைவரை ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. போதிய நிலவசதிகள் உள்ள இவ் வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக்கி தரமுயர்த்தி கட்டடங்கள் அமைத்து வைத்தியர் நியமித்தால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு யாழ் நகரின் மேற்குப்பகுதியில் இருந்து வரும் நோயாளிகளின் நெருக்குதலைக் குறைக்க முடியும் இங்கு ஒரு புதிய அம்புலன்ஸ் வண்டி இருந்தும் அம்புலன்ஸ் சாரதியோ, கடமையாற்றும் அறையோ இல்லை. இக் குறைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

க. திரவியம்
இணைச்செயலாளர்,
சங்கானை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை.

## திருமலை மீனவர், விவசாயிகளில் விடுதலைப்புலிகள் அதிக அக்கறை

கடந்தகாலங்களில் திருமலையில் மீனவர்களும், விவசாயிகளும் பெரும் பாதிப்படைந்துள்ளனர். இனிவரும் காலங்களில் செயற்படுத்தப்படவுள்ள புனர்வாழ்வு;புனரமைப்பு வேலைகளில் இவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும் இவ்வாறு விடுதலைப்புலிகளின் திருமலைப் பொறுப்பாளர் தயா திருமலையில் நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சிதைந்துபோன தொழில் நடவடிக்கைகளையும் சீர்குலைந்துள்ள பஸ் போக்குவரத்துக்களையும் சீரமைக்க தாம்நடவடிக்கைஎடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டு. கிளி. முல்லை மாவட்டத்தில்

## பெரும்போக நெல் விளைச்சல் பெருமளவு அதிகரிப்பு

மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெல்விளைச்சல் கடந்த வருடங்களைவிட அதிகரித்துள்ளது.

இதனால் இப்பகுதிகளில் நெல்லின் விலை வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. முல்லைதீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஒருமூடை நெல்லின்விலை 450 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 104265 ஏக்கரில் நெல் செய்கை பண்ணப்பட்டது இதன்படி கடந்த காலத்தைவிட இம்முறை 22 வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின்போது ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 65 புசல்களாக இருக்க இம்முறை 75 புசல்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஜன் கதிர்காமர் கிண்ணம் கிரிக்கெட் போட்டி


தொகுப்பு: கப்டன் டி, குணசிங்கம்

(விளையாட்டுத்துறை நிருபர்)

## சென். பற்றிக்ஸ்—வட்டு. யாழ்ப்பாண கல்லூரிகள் நாளை மோதும்

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் ருஜன் கதிகாமர் வெற்றிக் கிண்ணத்திற்கான வரையறுக்கப்பட்ட ஓவர் ஒருநாள் கிரிக்கெட் பந்தய வரிசையில் ஐந்தாவது கிரிக்கெட் பந்தயம் நாளை திங்கட்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரித் திடலில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை 1985 -ம் ஆண்டு சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா ஜீ. ஏ. பிருன்சிஸ் யோசப் அடிகளார் அறிமுகம் செய்து. அதற்குரிய பரிசு கிண்ணத்தையும் அன் பளிப்புச் செய்தார். இப்போட்டித் தொடரில் 1985, 1986, 1987, 1989 ஆம் ஆண்டு களில் நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரியே வெற்றி பெற்றிருந்தது.



சென். பற்றிக்ஸ் அணி

## கடந்த கால போட்டிகளின் தொகுப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1985 | யாழ்ப்பாணக் கல்லூரி | 9 விக்கற் | 158, | சென்பற்றிக்ஸ் 8 விக்கற் | 185 |
| 1986 | யாழ்ப்பாணக் கல்லூரி | 6 விக்கற் | 121, | சென்பற்றிகஸ் சகல விக்கற்கள் | 120 |
| 1987 | யாழ்ப்பாணக் கல்லூரி | 9 விக்கற் | 161, | சென்பற்றிக்ஸ் 9 விக்கற் | 154 |
| 1989 | யாழ்ப்பாணக் கல்லூரி | சகலவிக் கற்கள் | 168, | சென்பற்றிக்ஸ் சகலவிக்கற்கள் | 167 |



யாழ்ப்பாணக் கல்லூரி அணி

காஷ்மீர் விவகாரம்

## மிகுந்த நிதானத்துடன் செயற்படுகிறோம் வி. பி. சிங்

(புதுடில்லி)

பாரதத்திற்குக் காஷ்மீரில் ஏற்பட்டுள்ள பிரச்சினை எல்லைக்கப்பால் இருந்து வரும் நேரடித் தலையீடுதானேயன்றி வேறல்ல. அப்படியிருந்தும் பாகிஸ்தான் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மிகுந்த நிதானத்துடன் செயற்பட்டு பாரதம் இருதரப்பு உறவுகளைப் பராமரிக்க முயல்கிறது'' என்று பாரதப் பிரதமர் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் கூறியுள்ளார்.

மாலைதீவு ஜனுபதி அப்துல் கையூமிடம் தம் நாட்டுநிலையினை விளக்கி இவ்வாறு திரு. சிங் மேற்கண்டவாறு சொன்னுர்.

சிம்லா ஒப்பந்தத்தைப் பாரதம் பற்றிநிற்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர் இவ்வொப்பந்தத்தைக் குறைவாக மதிப்பிடுவது அறிவுடைமையாகாது என்ருர்.

இது இப்படி இருக்க,பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ சமீபத்தில் பாரதத்தைத்தாக்கிப் பேசியதுகுறித்து பாரதம் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. புதுடில்லியுள்ள பாகிஸ்தான் இணைத்தூதரை பாரத வெளிவிவகார அமைச்சில் வைத்துஇக்கண்டனம்தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு சிம்லா ஒப்பந்தத்தினை மீறுவது ஆத்திரமூட்டக்கூடியது வன்முறையைத் தூண்டுவது என்று இக்கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### புங்குடுதீவில்

சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையின் தீவுப்பகுதிப்பிரிவின் சான்றிதழ் வழங்கும் வைபவமும், கைநூல் வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலத்தில் நடைபெறும். மேற்படி கல்லூரி அதிபர் செல்வி ம. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் வடமாகாண சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்படைஆணையாளர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி, வேலணை கோட்டக்கல்வி அதிகாரி எஸ். புலேந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுவர். (19)

### வட்டுக்கோட்டையில்

இயேசுக் கிறீஸ்து நாதருடைய பாடுகளைப்பற்றிய விசேஷக் காட்சிகளும், பாடல்களும், வட்டுக்கோட்டை ஆசனப் பேராலயத்தில் இன்று இடம் பெறுகின்றன. யாழ்பபாணக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர் - மாணவிகள் தயாரித்து வழங்கும் மேற்படி சிறப்புத் திருப்பாடல் ஆராதனை மாலை ஐந்து மணியளவில் நடைபெறும்.

### பருத்தித்துறையில்

''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்'' நூலின் இரண்டாம் பதிப்பின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை வட - இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நூலை திரு. சந்திரன் எழுதியுள்ளார். விழாவிற்கு டாக்டர் எம். கே முருகானந்தன் தலைமை தாங்குகிருர். வெளியீட்டுரையை வீ. எஸ். ஏகாம்பரநாதன் நிகழ்த்துவார். திரு. கமலசேகரம் முதற்பிரதியைப் பெறுவார் த. கலாமணி தெணியான், செல்வி அ. கனகரத்தினம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

### வயாவிளானில்

வயாவிளான் மத்திய வித்தியாலயப் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலைப் புனரமைப்புகளில் பங்களிப்புச் செய்யப் பழைய மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளதாக வயாவிளான் கொத்தணி அதிபர் திரு. ஏ. எஸ் நடராஜா தெரிவித்துள்ளார். (12)

### கரம்பனில்

கரம்பன் குருமடத்தில், ஸ்தாபகர் நினைவுதின சொற்பொழிவு இன்று மாலைஇடம் பெறும். அருட்திரு டொமினிக் அன்ரன்யோசப் அடிகளார் இன்று சொற்பொழிவு வாற்றுவார்.

## விடுதலை

(சென்னை)

தமிழகத்தில் ரயில் பறிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்பேரில் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்ட சகல காங்கிரஸ் எம் பிக்களையும்' எம். எல் ஏக்களையும் விடுதலை செய்யுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## இன்று நாள் எப்படி?

மேடம்: உத்தமருறவு, வாகன மாற்றம், பெரியோ ராசி, வெளியூர்ப்பிரயாணம், வணிகர்கள் இலாபம்.

இடபம்: விவாக நிச்சயம். பணவரவு, சகோதர வழியுதவி, தூரதேச பிரயாண நிறைவு.

மிதுனம்: சத்துருபயம், பண நஷ்டம், பிரயாணத்தடை, மாமன்வழியுதவி, வாகன மாற்றம்.

கடகம்: புத்திரசுகம், கல்வியாற் தொழில், பிரிந்தவர்கள் சேருவர், உயர்பதவி.

சிங்கம்: மாதா வழியுதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கன்னி: சகோதர வழியுதவி, உயர்பதவி, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், புதுத் தொழில்.

துலாம்: வாக்குவசிகரம், பணவரவு, வாகனசுகம், தூரத்துப்பிரயாண நிறைவு.

விருச்சிகம்: பெண்களாற்பகை, மனக்கிலேசம், தொழிற் தடை, தடைப்பட்ட பணவரவு.

தனுசு: திருடர்பயம், தொழில் மாற்றம், பெரியோ ராசி, தூரதேசம் போனவர் வருகை.

மகரம்: உயர்பதவி, வாக்குப் பலிதம், வணிகர்கள் இலாபம், தேடியவர் வருகை.

கும்பம்: இராஜமரியாதை, திடீர்ப்பிரயாணம், பணவரவு, வாகனசுகம், வணிகர்கள் இலாபம்.

மீனம்: பிதாவழியுதவி, மனையலங்காரம், வாக்குப்பலிதம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஜனாதிபதியின் 10 லட்சம் வீட்டு திட்டத்தின் கீழ்

# மட்டக்களப்புமாவட்டத்தில் 7456வீடுகள் கட்டப்பட்டன

மட்டகளப்பு மாவட்டத்தில் ஜனாதிபதியின் 10 லட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் இதுவரை 7456 வீடுகள் அமைக்கப்பட்டன.

இத்தகவலை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு கே. பத்மநாதன் தெரிவித்தார்.

நகர வீடமைக்புத் திட்டத்தின் கீழ் 1129 வீடுகளும் கிராம வீடமைப்பு திட்டத்தின்கீழ் 6327 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவினம் 3 கோடி 25 லட்சம் என்று அவர் தெரிவித்தார். (05)

# செயலக ஊழியர் உதவியுடன் இலங்கைவங்கியில் நிவாரணம்

யாழ் வங்கிகளில் செயலக ஊழியர்களைப் பயன்படுத்தி நிவாரணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் புதியதிட்டம் நாளை திங்கட்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் யாழ் செயலக ஊழியர்கள் ஆஸ்பத்திரி வீதி இலங்கைவங்கிக் கிளையின் இரண்டு கருமபீடங்களில் நாளை நிவாரணக் கொடுப்பனவு வேலைகளில் ஈடுபடுவர்.

இக்கிளையில் நாளை உசன் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த306குடும்பங்களுக்கும், மீசாலை வடக்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 301 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகிய 1000ரூபா வழங்கப்படும்.

நாளைமறுதினம் செய்வாய்க்கிழமை வரணிவடக்கு கிராம சேவையாளர்பிரிவைச்சேர்ந்த 307குடும்பங்களுக்கும், கரம்பைக்குறிச்சி பிரிவைச் சேர்ந்த 112குடும்பங்களுக்கும், விடத்தல்பளை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த80 குடும்பங்களுக்கும், சாவகச்சேரிகிழக்கு பிரிவைச் சேர்ந்த135 குடும்பங்களுக்கும் செயலக ஊழியர்களின்உதவியுடன் ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் வைத்து இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் செயலக ஊழியர்களின் உதவியுடன் காங்கேசன்துறை வங்கியில் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாக செயலக அதிகாரி ஒருவர்நேற்று'முரசொலி'க்குத் தெரிவித்தார்.

செயலக ஊழியர்களைப்பயன்படுத்தி விசேடதிட்டத்தின்கீழ் வங்கிகளில் நிவாரணம் வழங்கப்படவுள்ளமை பற்றி நேற்றைய, 'முரசொலி'யில் செய்தி வெளியாகியிருந்தமை வாசகர் அறிந்ததே. (03)

# வல்வையில் மாத இறுதிக்குள் புதிய இலங்கை வங்கிக்கிளை

இம் மாத இறுதிக்குள் வல்வையில் இலங்கை வங்கி கிளை ஒன்று நிறுவப்படவுள்ளது. தொண்டமனாறு, உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதி மக்களின் தேவையை கருத்திற்கொண்டு மேற்படி இலங்கை வங்கிகிளை ஆரம்பிக்கப் படவுள்ளது.

வல்வைப் பிரமுகர்கள் குழுவொன்று வல்வையில் வங்கிக் கிளையின் தேவை குறித்து வங்கித் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டனர். இதற்கு வங்கி நிர்வாகமும் சரியான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தது.

இம்மாத இறுதிக்குள் வல்வையில் இலங்கை வங்கிகிளை நிறுவப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது. (39)

# அரச அதிபர்கள் மாநாடு நாளை கொழும்பில் நடைபெறும்

நாளை கொழும்பில்அரசாங்க அதிபர்கள் மட்டத்திலான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இலங்கையின் சகல அரசாங்க அதிபர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள்,

நிவாரண கொடுப்பனவுத் திட்டங்கள், மற்றும் இவ்வாண்டுக்குரிய விடயங்கள் போன்றவை இக்கூட்டத்தில் முக்கியமாக அராயப்படவுள்ளன. (03)

## இந்திய...

இந்திய அமைதிப்படை தளபதி லெப். ஜெனரல் கல்கட் நேற்று முன்தினம் கொழும்பு சென்றுள்ளார். மேற்படி சந்திப்பின் பேr/தே இந்தியத் தளபதி கல்கட் தன் படையினரின் விலகலின் கடைசித் திகதியை இலங்கை அரசிடம் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கல்கட் பாதுகாப்பு இணையமைச்சர், இலங்கை இராணுவ தளபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் பேச்சுகளை நடத்துவார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நேற்று இலங்கை இராணுவத்தளபதி ஹமில்டன் வணசிங்க இந்தியத் தளபதி கல்கட்டுக்கும் அவருடன் வந்த ஏனைய ஆறு அதிகாரிகளுக்கும் மரியாதைப் பூர்வ விருந்துபசாரம் ஒன்றை வழங்கினார்.

## அம்பாறையில்...

தப்பிச் சென்றுள்ளதாக இலங்கைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் இக் காட்டுப் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். (05)

## கொழும்புத்துறை...

தெரியாது திண்டாடுகின்றனர்.

இதுபற்றி கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைப் பிரிவின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவந்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என இக்கலாசாலையில் பயிற்சியை முடித்துள்ள ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியகலாசாலை மூடப்படும்போது ஆசிரிய மாணர்களதுவிபரம், அவர்களது பரீட்சைப் பெறுபேற்று விபரம் என்பன கல்விஅமைச்சின் ஆசிரியகலாசாலைப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருத்தல்வேண்டும். கல்லூரி நிர்வாகம் இதனைச் செய்யாததாலேயேஇந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

## வடபகுதி...

பணிப்பாளர் திரு. வீ. ஏ திருஞானசுந்தரம் முரசொலிக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் தெரிவித்துள்ளார். நாளை முரசொலியில் முழுமையாக வெளிவரும்.

## காலமானர்

## திருமதி இராமலிங்கம் பூரணம்

சுண்டிக்குளியை பிறப்பிடமாக கொண்டவரும், கட்டப்பிராயை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி இராமலிங்கம் பூரணம் 17-3-90 ஆம் திகதி காலமானார். இவர் காலஞ்சென்ற கதிரவேலு இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவநாதன், லோகநாதன், குணநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபாவதி நகுலேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் மாமியாரும் சுவிந்தி, மயூரன், சகிலா, றூபிலா, தருஷனன், சுதாகர், மதனராஜ். ஜனு, விது, கண்ணன் ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற சுண்டிக்குளி க பொன்னம்மா, சிவகுரு, சதாசிவம் ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 3 90 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு கட்டப்பிராய் இல்லத்தில் இருந்து இருபாலை மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பிள்ளைகள்

கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,

03162

---

பருத்தித்துறையிலுள்ள

# எரிபொருள் நிரப்பு நிலையம் ப.நோ.கூ.சங்கப் பொறுப்பில்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பெற்ரோல் நிலையத்தை பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கம் பொறுப்பேற்றது.

மேற்படி பெற்ரோல் நிலையம் கடந்த ஆறுவருடங்களாக சேதமடைந்த நிலையில் இயங்காது இருந்தது. தற்போது சிறிய திருத்த வேலைகளை அடுத்து பருத்தித்துறை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் மேற்படி நிலையத்தை பொறுப்பேற்று இப்பெற்ரோல் நிலையம் இம் மாதம் முதல் இயங்கும் எனதெரிவிக்கப்படுகிறது. (39)

இந்திய பிரசைகள் உட்பட சகலரும்

# வன்னித்தேர்தல் மாவட்டத்தில் மே 8ற்குமுன் வாக்காளர் பதிவு

(வவுனியா)

வன்னிதேர்தல் மாவட்டத்தில் இதுவரையும் வாக்காளர்களாக பதிவு பெற விண்ணப்பிக்காதவர்கள் இருப்பின் இவ்வாண்டு மே மாதம் 8-ம் திகதிக்கு முன்னர் வன்னி தேர்தல் உதவி ஆணையாளருக்கு உரியபடிவத்தில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்

இந்திய பிரசா உரிமைக்கு விண்ணப்பித்தவர்களும் ஏற்கனவே இந்திய பிரசா உரிமை பெற்றவர்களும் வாக்காளர்களாக பதிவுபெற தகைமையற்றவர்களாவர் என வன்னி மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் திரு. மு. திருநாவுக்கரசு சகல கிராம சேவையாளருக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வன்னி தேர்தல் மாவட்டம் என்பது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை அடக்கும் (11)

# யாழ்-வவுனியா கடைசி பஸ் மாலை 3 மணிக்கு நடத்ததிட்டம்

(வவுனியா)

யாழ்ப்பாணத்திற்கு கடைசி பஸ் வவுனியாவில் பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு இரவு ஏழு மணிச்கு யாழ்ப்பாணம் போய் சேரும்

அடுத்த சில தினங்களில் இந்த சேவையை ஆரம்பிக்க வடபிராந்திய போக்குவரத்து சபை ஆலோசித்து வருவதாக சபை வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

இதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்தும் பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவிற்கு ஒரு பஸ் புறப்படும்.

நிலைமை சகஜமாகி வருவதனாலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தெரிகின்றது.

தற்போது பகல் ஒருமணிக்கு பின்பு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்கள் புறப்படுவதில்லை என்பது இங்கு குறிப்பிடதக்கது. (11)

# நிவாரண குடும்ப அட்டையில் திருத்தம் செய்யத் தடை

வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் குடும்பப்பதிவு அட்டையில் எவ்வித திருத்த வேலைகளையும் மேற்கொள்ள வேண்டாமென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

தவறுதலான பதிவுகளால் துளையிடப்பட்டபதிவு அட்டைகள் இதுவரைகாலமும் துளைகள் அடைக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவந்தது.

இனிமேல் இப்படியான தவறு இடம் பெற்ற குடும்ப அட்டைகளுக்குப்பதிலாக புதிய குடும்பப் பதிவு அட்டை வழங்கப்படவேண்டுமென அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை புதிதாக குடும்பப் பதிவு அட்டை வழங்குவதற்கு யாழ் மாவட்ட செயலகத்தில் குடும்ப பதிவு அட்டை இல்லையென தெரிவிக்கப்படுகின்றது. (03)

# அரச எழுதுவினைஞர் சங்கம் மன்னாரில்கிளை அமைப்பு கூட்டம்

(மன்னார்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மன்னார் மாவட்டத்தல் கிளை ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது கிளை அமைப்பதற்கான ஆரம்பக்கூட்டம் இம் மாதம் 21ந் திகதி மன்னார்க்கச்சேரி நலன்புரிச்சங்க மண்டபத்தில் மாலை 3 30 மணிக்கு நடைபெறும். கூட்டத்திற்குத் தாய்ச்சங்கப் பிரதிநிதி தோழர் எஸ் பரராசசிங்கம் வருகை தருவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.


முழுநேர அல்லது பகுதிநேர
அச்சுக் கோர்ப்பாளர்கள்
முரசொலிக்குத் தேவை

ஆற்றல்மிக்க இரவுநேர அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேர அடிப்படையிலோ ''கொலம் சைஸ்'' அடிப்படையிலோ, பகுதி நேரமாகப் பணிபுரியக் கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றுபவர்களுக்கு விசேட மாதாந்த ஊக்குவிப்புப் படியும் வழங்கப்படும்.

19–03–90 க்கு முன்
காலை 10 மணிக்கும் பகல் 12 மணிக்கும்
இடையில் பொதுமுகாமையாளரைச் சந்திக்கவும்
முரசொலி பப்ளிஷர்ஸ் பிறைவேற் லிமிற்றெட்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை முரசொலி பப்லிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 18-03-1990ல்] அச்சிட்டு வெளியிடப்பெற்றது